பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

30 09 2026 WEDNESDAY 7 15 AM

ஆகாஷ்வாணி – செய்திகள்

தலைப்பு செய்திகள்

1. போதைப்பொருள் இல்லாத பஞ்சாப் என்னும் யாத்திரையை தொடங்கி வைப்பதற்காக, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று அம்மாநிலத்திற்கு செல்கிறார்.

2. ஜம்மு-கஷ்மீர் குறித்து ஐ.நா. சபை கூட்டத்தில் துருக்கி அதிபர் தெரிவித்த கருத்துக்களை இந்தியா நிராகரித்துள்ளது.

3. ஜம்மு-கஷ்மீரில் பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

4. பாதுகாப்பு தொழில்துறையில் ஒத்துழைப்பு குறித்து இந்தியாவும்-தென்கொரியாவும் ஆலோசனை நடத்தியுள்ளன.

5. மொராக்கோ நாட்டின் முதல் பெண் பிரதமராக Fatima Zahra Mansouri-வை அந்நாட்டு மன்னார் மொகமது நியமித்துள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

----------------

போதைப்பொருள் இல்லாத பஞ்சாப் என்னும் யாத்திரையை தொடங்கி வைப்பதற்காக, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று அம்மாநிலத்திற்கு செல்கிறார்.

ஜலந்தரில் இந்த யாத்திரை நடைபெற உள்ளது.

பஞ்சாப் மாநிலம் பதான்கோட்டில் கடந்த 18-ம் தேதி போதைப்பொருள் இல்லாத பஞ்சாப் என்ற பெயரிலான யாத்திரையை பிஜேபி தலைவர் திரு நிதின் நபின் தொடங்கி வைத்தார்.

கடந்த 13 நாட்களில் இம்மாநிலத்தின் 117 தொகுதிகளிலும் இந்த யாத்திரை நடைபெற்றது.

----------------

ஐ.நா சபை கூட்டத்தில் இந்தியா சிறப்பான ஒத்துழைப்பு வழங்கியதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரிடம் திரு. ஆண்டனியோ குட்ரஸ் பாராட்டு தெரிவித்துள்ளார்.

நியூயார்க்கில் நேற்று டாக்டர் ஜெய்சங்கர், ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. ஆண்டனியோ குட்ரஸை சந்தித்து பேசினார்.

அப்போது அவர் இந்தியாவின் ஒத்துழைப்புக்கு பாராட்டு தெரிவித்ததாக ஆண்டனியோ குட்ரஸின் செய்தி தொடர்பாளர் ஸ்டீபன் துஜாரிக் தெரிவித்துள்ளார்.

திரு ஆண்டனியோ குட்ரசுடன் மத்திய கிழக்கு பகுதியில் நிலவும் சூழல், யுக்ரைன் போர் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து டாக்டர் ஜெய்சங்கர் ஆலோசித்ததாக அவர் மேலும் கூறினார்.

----------------

அணு ஆயுதங்கள் இல்லாத உலக நாடுகள் மற்றும் அவற்றை முழுமையாக ஒழிப்பதற்கான இலக்கு என்ற உறுதிப்பாட்டை இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

நியூயார்க்கில் ஐ.நா. சபையின் அணு ஆயுதங்களை முற்றிலுமாக அகற்றுவதற்கான சர்வதேச தினம் குறித்த உயர்நிலை குழு கூட்டத்தில், இந்தியாவின் மேற்கு பிராந்தியத்திற்கான வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. சிபி ஜார்ஜ் இதனை வலியுறுத்தினார்.

இனம் மற்றும் நிற அடிப்படையிலான பாகுபாட்டிற்கு எதிரான இந்தியாவின் தளராத உறுதிப்பாட்டை அவர் அப்போது எடுத்துரைத்தார்.

தற்போது நடைபெற்று வரும் ஐ.நா. சபை கூட்டத்தில், டர்பன் உறுதிமொழி மற்றும் திட்ட நடவடிக்கையை அமல்படுத்துவது குறித்தும், திரு. சிபி ஜார்ஜ் எடுத்து கூறினார்.

----------------

ஜம்மு-கஷ்மீர் குறித்து ஐ.நா. சபை கூட்டத்தில் துருக்கி அதிபர் தயீப் எர்டோகன், தெரிவித்த கருத்துக்களை இந்தியா நிராகரித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், ஜம்மு-கஷ்மீர் விவகாரம் இந்தியாவின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையுடன் தொடர்புடையது, எந்த ஒரு அந்நிய சக்தியும் இதில் உரிமை கொண்டாட முடியாது என்று உறுதிபட கூறினார்.

நியூயார்க்கில் ஐ.நா. கூட்டத்திற்கு இடையே நடைபெற்ற இந்தியா, பிரேசில், தென்னாப்பிரிக்கா நாடுகளின் ஆலோசனைக்கு பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் ஜம்மு-கஷ்மீர் குறித்த தெளிவான நிலைப்பாடு வெளியிடப்பட்டதாக அவர் கூறினார்.

எல்லை தாண்டிய பயங்கரவாதம் மிகப்பெரிய கவலை அளிக்கக்கூடியது என்றும் உலக நாடுகள் ஒன்றிணைந்து அதனை முறியடிக்க வேண்டும் என்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள கருத்துக்களையும் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் சுட்டிக்காட்டியுள்ளார்.

----------------

தலைநகர் தில்லியில், இளம் வாக்காளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் நோக்கில் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் தேர்தல் ஆணையத்தின் சார்பில் சிறப்பு பதிவு முகாம் இரண்டாவது நாளாக இன்றும் நடைபெறுகிறது.

நேற்று நடைபெற்ற முகாமில் ஏராளமான மாணவர்கள் பங்கேற்று, தங்களின் பெயர்களை பதிவு செய்தனர்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி குறித்த தகவல்களையும், வாக்காளர் பதிவுக்கான படிவங்களை பெற்றும் அவர்கள் பதிவு செய்வதற்கு தேர்தல் ஆணையத்தின் பகுதி அளவிலான அதிகாரிகள் உதவி செய்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதேபோல், வரும் 7 மற்றும் 8-ம் தேதிகளில் வாக்காளர் பட்டியலில் மாணவர்கள் தங்களின் பெயர்களை பதிவு செய்வதற்காக சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

----------------

பாதுகாப்பு தொழில்துறையில் ஒத்துழைப்பு குறித்து இந்தியாவும்-தென்கொரியாவும் ஆலோசனை நடத்தியுள்ளன.

புதுதில்லியில் நேற்று 10-வது இந்தியா-தென்கொரியா பாதுகாப்பு தொழில் மற்றும் தளவாட ஒத்துழைப்பு தொடர்பான கூட்டுக்குழு கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு இந்தியா பாதுகாப்பு உற்பத்தி செயலாளர் திரு. தினேஷ் மாகூர், தென்கொரியாவின் பாதுகாப்பு துறையின் அமைச்சர் Kim Dong ஆகியோர் கூட்டாக தலைமை வகித்தனர்.

இந்தக் கூட்டத்தில் இருநாடுகளுக்கும் இடையே பாதுகாப்பு, தொழில்துறையில் தற்போதுள்ள கூட்டுறவை மேலும் வலுப்படுத்துவதுடன் விரிவுப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் இருநாடுகளும் முன்னேற்றமான நிலையை எட்டுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

----------------

இந்திய பெருங்கடல் மண்டல பாதுகாப்புக்கு இந்தியா உயர் முன்னுரிமை அளிக்கும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்திய கடற்படை கமாண்டர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், முப்படைகளும் எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பிரச்சினைகள் தொடங்குவதற்கு முன்பே அதுகுறித்து ஆய்வு செய்து, அதற்கான செயல் திட்டத்தை விரைந்து முடிவெடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இந்திய கடற்படையின் திறமையான செயல்பாட்டிற்கு ஆபரேஷன் Urja Suraksha முன்மாதிரியாக திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

இதன்மூலம், நாட்டின் எரிசக்தி விநியோக கட்டமைப்பை பாதுகாக்கும் பணி நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மகா சாகர் தொலைநோக்குத் திட்டம் பற்றி குறிப்பிட்ட அவர், தென்சீன கடற்பகுதி, மத்திய தரைக்கடல், அட்லாண்டிக் பெருங்கடல் பகுதிகளில் இந்திய போர் கப்பல்கள், கடல்சார் பாதுகாப்பை உறுதி செய்வதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்திய கடற்படை எவ்வித போர் நெருக்கடிக்கும் உடனடியாக பதிலடி கொடுக்கும் வகையில் தயார் நிலையில் இருப்பது பாராட்டுக்குரியது என்றும் அவர் தெரிவித்தார்.

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் முயற்சியில் கடற்படையின் ஒத்துழைப்பும் முக்கிய பங்காற்றுவதாகவும் அவர் கூறினார்.

கடல்பகுதியில் நாட்டின் தேசியக்கொடி ஏந்திய கப்பல் நிறுத்தப்படுவது நாட்டுக்கு பெருமை சேர்ப்பது மட்டுமன்றி, பாதுகாப்பையும், நம்பிக்கையையும், நட்பு நாடுகளுக்கு உணர்த்துவதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

----------------

ஜம்மு-கஷ்மீரின் பத்காம் மாவட்டத்தில் நேற்று பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

Yousmarg அருகே கோரக் என்ற இடத்தில் இந்த துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாகவும், ராணுத்தினருடன் காவல்துறை, மத்திய ரிசர்வ் காவல்படையினரும் இணைந்து இந்த தாக்குதலை நடத்தியதாக ராணுவத்தினர் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட தீவிரவாதி Fauzi Musa என அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும், லஷ்கர்-இ-தொய்பா அமைப்பின் முக்கிய கமாண்டர் என தெரிவந்திருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

----------------

காடுகளைப் பாதுகாத்து, மரங்களை சேகரிக்க, உலகளவிலான நெறிமுறைகளைப் பின்பற்றுமாறு, மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில், வனம் மற்றும் வேளாண் காடுகள் சார்ந்த உற்பத்திப் பொருட்களுக்கு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளை எளிதில் அணுகுவதற்கான PRAMAAN சான்றிதழை வழங்கி அவர் பேசினார்.

உள்நாட்டு உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் வனம் சார்ந்த நிறுவனங்களுக்கு, இந்த சான்றிதழ், இன்றியமையாததாக அமையும் என்றும் திரு.பூபேந்தர் யாதவ் குறிப்பிட்டார்.

----------------

மொராக்கோ நாட்டின் முதல் பெண் பிரதமராக Fatima Zahra Mansouri-வை அந்நாட்டு மன்னார் மொகமது நியமித்துள்ளார்.

தற்போது, அந்நாட்டின் நகர்ப்புற திட்ட அமைச்சராக Fatima Zahra Mansouri பதவி வகித்து வருகிறார்.

மொராக்கோவில் தேர்தல் முடிவுகள் வெளியாகி நான்கு நாட்களுக்கு பின்னர் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

Mansouri-ன் கட்சி அதிக வாக்குகள் பெற்றதையடுத்து அவர் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

----------------

இந்தியா – வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கிடையே இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.

குவஹாத்தியில் பிற்பகல் 2 மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

மூன்று ஒருநாள் மற்றும் ஐந்து டுவெண்டி டுவெண்டி போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்பதற்காக வெஸ்ட் இண்டிஸ் அணி இந்தியா வந்துள்ளது.

கடந்த 27-ம் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் முன்னிலை பெற்றுள்ளது.

மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டி வரும் 3-ம் தேதி சண்டிகரில் நடைபெற உள்ளது.

----------

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், 4 X 100 மீட்டர் கலப்பு தொடர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கம் வென்றவர்களுக்கும், மகளிர் 4 X 100 மீட்டர் தொடர் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் வென்றவர்களுக்கும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குயடிரசு துணைத்

விளையாட்டுச் செய்திகள்--2

தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் ஆகியோர் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டுள்ளனர்.

>>>>>>><<<<<<<